விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (05.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 341

ராம்கோ
MADRAS CEMENTS LTD.
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# மட்டக்களப்பு-அம்பாறையில் இராணுவம்-புலிகள் மோதல்

## 7 அதிரடிப் படையினர் பலி; 13 பேர் காயம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் மோதல் இடம்பெற்றுள்ளது. இத்தாக்குதலில் 7 சிறப்பு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டதாகவும் 13 பேர் காயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். தமது தரப்பில் மூன்று போராளிகள் காயமடைந்ததாக அவர்கள் தெரிவித்தனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி மகிந்த - ரணில் இன்று பேச்சு

(கொழும்பு)

இரு பிரதான கட்சிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இரு கட்சிகளின் உயர்மட்டத் தலைவர்களிடையிலான சந்திப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலான சந்திப்பு நடைபெறவுள்ளது.

நாட்டில் நல்லாட்சியை அமைக்கவும் சமாதான முயற்சிகளை மீளவும் முன்னெடுக்கவும் தனது கட்சி ஆதரவு வழங்கி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்து இட்டதாக ரணில் விக்கரமசிங்க தெரிவித்திருந்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கைச்சாத்தான இந்த ஒப்பந்தத்தின் பின்னர் நாட்டில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதுடன் இரு தலைவர்களும் இந்தியப் பயணத்தையும் மேற்கொண்டனர்.

இந்த நிலையில் இன்று நடைபெறவுள்ள இச் சந்திப்பில் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நிலைப்பாடு, நாட்டில் பரவலாக இடம்பெறும் வன்முறைகள், (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி செல்வதற்காக வியாழன்வரை காத்திருக்குமாறு நோர்வேக்கு அரசு அறிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை சந்திப்பதற்கு கிளிநொச்சிக்குச் செல்ல எதிர்வரும் வியாழக்கிழமை வரை காத்திருக்குமாறு அரசாங்கம் தெரிவித்ததாக நோர்வே ...

... வித்துள்ளது.

விடுதலைப்புலிகளை தடை செய்வதற்கு அரசாங்கம் செயற்பட்டால் பௌயரின் வடக்கு கிழக்கு விஜயம் தொடர்பாக எவ்வாறான தீர்மானம் எடுக்கப்படும் என கேட்டபோது தொடரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ...

## சர்வதேசத்தின் ஆலோசனையின்படியே புலிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ரவூப் ஹக்கீம் வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தொடர்பாக எடுக்கப்படக் கூடிய எந்தவிதமான பாரதூரமான நடவடிக்கையும் சமாதான முயற்சிகளில் துணைபுரியும் சர்வதேச சமூகத்தின் ஆலோசனையின் பேரில் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிறிலங்கா முஸ் ...

... கும் முகமாகவே ரவூப் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அண்மையில் நடந்த சம்பவம் மிகவும் ஆத்திரமூட்டுவதாக அமைந்திருக்கின்ற போதிலும் அதற்கான பதில் நடவடிக்கைகளில் அரசாங்கம் மிகுந்த பொறுமையைக் ...

புலிகளின் தலைமைத்துவத்தை சந்திப்ப தற்கு கிளிநொச்சிக்குச் செல்ல எதிர்வரும் வியாழக்கிழமை வரை காத்திருக்குமாறு அரசாங்கம் தெரிவித்ததாக நோர்வே தூதரகப் பேச்சாளர் எரிக் நியும் பேக் தெரிவித்திருக்கின்றார்.

ஜோன் ஹன்சன் பௌயரும் ஹன்ஸ் பிறஸ்கரும் இன்று கிளிநொச்சி செல்ல இருந்தனர். அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கு இணங்க இந்தப் பயணம் இடைநிறுத்தப்பட்டதாக நோர்வே தூதரகம் தெரி

க்கு கிழக்கு விஜயம் தொடர்பாக எவ்வாறான தீர்மானம் எடுக்கப்படும் என கேட்டபோது தொடரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஹான்ஸன் பௌயரே தனது கிளிநொச்சி விஜயம் குறித்து தீர்மானிப்பார் என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை குறித்து அரசாங்கத் தரப்பில் இருந்து எமக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என போர் நிறுத்த கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது. (ச-7)

... முயற்சிகளில் துணைபுரியும் சர்வதேச சமூகத்தின் ஆலோசனையின் பேரில் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலையடுத்து விடுதலைப்புலிகள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க இலங்கை அரசாங்கம் ஆராய்வதாக வெளியான தகவல்கள் குறித்துக் கேட்டதற்கு பதிலளிக்

ஆதாரமூட்டுவதாக அமைந்திருக்கின்ற போதிலும் அதற்கான பதில் நடவடிக்கைகளில் அரசாங்கம் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வந்துள்ள நோர்வேயின் சமாதானத்துக்கான சிறப்புத் தூதுவர் ஹான்ஸன் பௌயரை தான் சந்தித்த போது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக தெற்கிலேயுள்ள அரசியல் கட்சிகள் மத்தியில் இணக்கப்பாட்டை காண்பதற்கான சர்வகட்சி மாநாடு (04 ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதார-கலாசார சுதந்திரத்தை புலிகளுக்கு அரசு வழங்க வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பொருளாதார மற்றும் கலாசார சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பயணத்தை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க இலங்கை சமாதான முயற்சிகள் அடிப்படை போர்நிறுத்த ஒப்பந்தமே எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய முகாமைத்துவ கற்கை நிலையத்தில் நடைபெற்ற சமாதான முயற்சிகள் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் போரை ஆரம்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளன.

இது மிகவும் ஆபத்தானது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். இதனை மாற்றியமைப்பதற்கு சர்வதேச சமூகம் உடனடியாக முன்வர வேண்டும் என்றார்.

விடுதலைப் புலிகளுக்கு பொருளாதார மற்றும் கலாசார சுதந்திரத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் அரசாங்கமோ அவர்களின் மீதான தடையை விதிக்கவும் கட்டுப்படுத்தவும் முயற்சிகள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை முன்னரங்கப் பகுதியில் நேற்று மதியம் மோதல்

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் ஓமந்தை முன்னரங்க நிலைகளிலிருந்து இராணுவத்தினர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் முன்னேற்ற முயற்சி ஒன்றை மேற்கொண்டனர்.

இவர்களது முன்னேற்ற முயற்சி விடுதலைப்புலிகளின் கடும் எதிர்ப்பினால் முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வவுனியா ஓமந்தை பகுதியிலுள்ள போக்குவரத்துப் பாதை மூடப்பட்டது. இதனால் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு ஏழு நோயாளிகளுடன் சென்ற அம்புலன்ஸ் வண்டி செல்ல முடியாதுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்தே தாம் பாதையை மூடியதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

மீண்டும் இயங்க
ஆரம்பித்து விட்டது!

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்டிக் கண்ணாடி திருத்துதல் முதலிய வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும். ஒரு முறை விஜயம் செய்யுங்கள்! சு.நாராயண சாமி, 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(497)


# பஸ் விபத்து 15 பேர்காயம்

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.00 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஹபரண,தித்துள் உதுவப் பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியுடன் பேருந்து மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

(ச-9)

# வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி தொடர்பான வருடாந்த உயர்மட்டக் கலந்துரையாடல் இம்மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறும்.

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக 2007ஆம் ஆண்டில் முன்னெடுக்க வேண்டிய முன்மொழிவுகள், தீர்மானங்கள் ,அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளை கலந்துரையாடும் வருடாந்த உயர்மட்ட கலந்துரையாடல் எதிர் வரும் 7ஆம் திகதியும் 8ஆம் திகதியும் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

7ஆம் திகதி நடைபெறும் கலந்துரையாடல் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பி.தியாகலிங்கம் தலைமையிலும் 8ஆம் திகதி நடைபெறும் கலந்துரையாடல் வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள கல்விப்பணிப்பாளர் கே. விசாகலிங்கம் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

2007ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் மாணவர் கல்வி அபிவிருத்தி, பாடசாலைகளின் அபிவிருத்தி, ஆசிரியர்களின் வாண்மை விருத்தி, முகாமைத்துவம் தொடர்பான மேன்பாடு தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல்களில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

(ச)

# சோர்வு செலுத்தாத ஊழியர்கள் பணிநீக்கம்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சோர்வு செலுத்தாமலுள்ள பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்படவுள்ளனர்.

சோர்வு செலுத்துவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் ஏற்கனவே முடிந்த நிலையில் இன்று முதல் ஒவ்வொருவராக பணிநீக்கம் செய்யப்படவுள்ளனர்.

அவர்களின் இடத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டு தயார் நிலையில் இருப்பவர்கள் உடனடியாக நியமிக்கப்படவுள்ளனர் என யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்துள்ளார்.

(ச)

# அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளின் அதிபர் ,பிரதி அதிபர்பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம் மாதம் 21ஆம் திகதி 22ஆம் திகதிகளில் கல்வி அமைச்சில் நடை பெறவுள்ளன.

ஆசிரியர் கலாசாலைகளில் நிலவி வரும் அதிபர் ,பிரதி அதிபர்பதவி வெற்றிடங்களை உரியமுறையில் நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டிருந்தன.

இந்நேர்முகப் பரீட்சைக்காக யாழ். மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களின் பிரயாண வசதியைக் கருத்தில் கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு செல்ல வேண்டியவர்களின் பெயர் பட்டியல் மற்றும் விபரங்கள் கல்வி அமைச்சினால் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இலங்கை முழுவதிலும் உள்ள பத்துக்கு மேற்பட்ட ஆசிரிய கலாசாலைகளில் இரண்டு, மூன்று கலாசாலைகளில் தான் நிரந்தர அதிபர்கள் கடமை புரிகின்றனர். ஏனைய கலாசாலைகளில் அதிபர் மற்றும் பிரதி அதிபர் பதவிகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாமையினால் பதில் கடமை நிலையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# இடைத்தங்கல் முகாமில் உள்ளவர்களுக்கு பால்நிலை விழிப்பூட்டல் கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த 11.08.2006ற்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பால்நிலை தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மூன்று இடைத்தங்கல் முகாம்களும் வடமராட்சியில் எட்டு முகாம்களும் தென்மராட்சியில் பதினொரு இடைத்தங்கல் முகாம்களுமாக மொத்தம் 22 முகாம்களிலேயே மேற்படி விழிப்பூட்டல் கருத்தரங்குகள் இடம் பெறுகின்றன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தில் பால் நிலைசார்ந்த வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படுவதுடன் தெரிவுக் குழுக்களும் இடம் பெற்றுள்ளன.

அத்துடன் அம்மக்களின் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக ஆராயப்படுவதோடு அப்பிரச்சினைகளுக்கு அம்மக்களின் மூலமே தீர்வு காணத் தூண்டப்படுகிறது.

அடிப்படைத் தேவைகள் சிலவற்றை உடனடியாக நிறைவேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது என அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

# பாடசாலையைவிட்டு விலகியோருக்கு ஆங்கில அறிவூட்டும் விசேட திட்டம்

## கல்வி அமைச்சு ஆரம்பிப்பு

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகள் மற்றும் பொது மக்களுக்கு ஆங்கில அறிவினைப் போதிப்பதற்கான விசேட திட்டமொன்றினை கல்வியமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம் மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற தொனிப் பொருளுக்கு அமைவாகக் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் பணிப்புடன் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஆரியரத்ன கேவகே தெரிவித்துள்ளார்.

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புக் களைப் பெற்றுக் கொள்ள உதவும் பொருட்டே இத்திட்டம் அமுல் படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடிப்படை இடைநிலை மற்றும் உயர்தரம் ஆகிய மூன்று கட்டங்களில் பிராந்திய ஆங்கில கற்கை நிலையங்கள் மூலமாக ஆங்கில பாட வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இப்பாடநெறியை நடத்தும் ஆசிரியர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றினையும் கல்வியமைச்சு வழங்கவுள்ளது. பாடநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் விண்ணப்பங்களை உடனடியாக பிராந்திய ஆங்கில கற்கை நிலையங்களில் ஒப்படைக்குமாறும் அமைச்சு கேட்டுள்ளது.

(ச)

# வலிகாமம் மேற்குப் பகுதியில் கசிப்பு விற்பனை அதிகரிப்பு

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் பல கிராமங்களில் கசிப்பு விற்பனைகள் நாளுக்கு நாள் களைகட்டிய வண்ணம் இருப்பதாக அப்பகுதி பொது அமைப்புக்களும் பொது மக்களும் குற்றஞ்சாட்டு கின்றனர்.

கசிப்பு விற்பனைகளால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

எனவே இக்கசிப்பு விற்பனையை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பொதுஅமைப்புக்கள் கோரிக்கை விடுக்கின்றன.

சுழிபுரம்,அராலி,சங்கானை,வட்டுக்கோட்டைப் பகுதிகளில் இக்கசிப்பு விற்பனைகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ச-9)

# தமிழ்நாடு பரீட்சை ஆணையாளரை அனுர எதிரிசிங்க சந்திக்க ஏற்பாடு

பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க எதிர்வரும் 8ஆம் திகதி தமிழ்நாடு பரீட்சை ஆணையாளரைச் சந்திக்கவுள்ளார்.

தமிழ்நாடு அகதிமுகாம்களில் தங்கியுள்ள இலங்கை மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் க.பொ.த பரீட்சை நிலையத்தை ஏற்படுத்துவது தொடர்பாக இறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இச்சந்திப்பு இடம்பெறுகின்றது. க.பொ.த பரீட்சைக்கு தோற்ற வேண்டிய சுமார் 160 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தமிழ்நாட்டில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்காக அங்கு 5 பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளது.

(ச-5)

# சிக்கன்குனியா நோய் காரணமாக பெற்ற லீவினை நீக்கக் கோரிக்கை

நாட்டில் வேகமாகப் பரவி வரும் சிக்கன்குனியா வைரஸ் காய்ச்சலுக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுவரும் அரச ஊழியர்கள் பெற்ற லீவினை நீக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென அகில இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் க.நடராசா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சிக்கன்குனியா வைரஸ் காய்ச்சலுக்கு இலக்கான பல அரச ஊழியர்கள் இக்காய்ச்சல் குணமடைய பல நாட்கள் சிகிச்சை பெற வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

மறுபுறம் இவர்களில் பலர் லீவு பெற முடியாத அளவுக்கு உள்ளதால் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் இந்த லீவில் இருந்து அரச ஊழியர்களுக்கு விலக்களிக்க முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ச-5)


## சாரதி தேவை

சென்.ஜோன் அம்புலன்ஸின் அம்புலன்ஸ் வாகனத்திற்கு இரவு வேளையில் வாகனம் செலுத்துவதற்குத் தகுதியுடைய சாரதி ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் "A" தர சாரதி அனுமதிப் பத்திரமும் உடையவராக இருத்தல் வேண்டும். தகுதியுடையோர் 10.12.2006 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்குக் கீழ்க் குறிப் பிடப்பட்டுள்ள முகவரிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

தொ.பே.இல:- 2223166 சென்.ஜோன் அம்புலன்ஸ் காரியாலயம்
யாழ்.போதனா வைத்தியசாலை

குறிப்பு:-
அம்புலன்ஸ் சேவைக்கான தொலைபேசித் தொடர்பு இலக்கங்கள்:-
பகல் காலை 7.00 - மாலை 4.00 - 222 3166
இரவு மாலை 4.00 - காலை 7.00 - 222 5599

(C-553)




வாகரையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து உணவுப் பொருட்களை வழங்கின. அதனை படத்தில் காணலாம்.

பொறுமையில்லாதவர்கள் நீதிமான்களாக இருக்க முடியாது.

—ஒரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

# போருக்கான அறிகுறி

நாட்டில் யுத்தம் நடப்பதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளன. சமாதானப் பேச்சுவார்த்தைகளை இருதரப்பும் முன்னெடுக்க வேண்டுமென சர்வதேச சமூகம், முனு முனுத்துக் கொண்டாலும் யுத்தத்திற்கான ஏற்பாடுகளே நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அதன் தலைவர் வே.பிரபாகரன் தெளிவாகக் கூறியிருந்தார்.

நீதியான தீர்வு எதனையும் அரசு தரப் போவதில்லை என்பதால் தமிழீழத் தனியரசுக்கான தெரிவையே அரசு விட்டு வைத்திருப்பதாகவும் அவர் தனது மாவீரர் தின உரையில் கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் "தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை" எனக் கூறியதை அரசு எதிர் பார்த்திருக்கவில்லை.

சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பை பெறுவதற்காக மீண்டும் சமாதானம் என்பதையே பிரபாகரன் முன்வைப்பார் என அரசு எதிர் பார்த்திருந்தது.

எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக தமிழீழத் தனி அரசு என்ற கொள்கைப் பிரகடனமாக விடுதலைப் புலிகளின் மாவீரர் தின உரை அமைந்தமை அரசுக்கு பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ளது. சமாதானப் பேச்சு வார்த்தை எனக் கூறிக்கொண்டு விடுதலைப் புலிகளை ஆயுதபலத்தால் அடக்கும் அரசின் திட்டம் சிதறடிக்கப்பட்டமையே சிக்கலுக்கான காரணமாகும்.

இப்போது யுத்தம் ஒன்றே இருதரப்பினரதும் தெரிவாகியுள்ளது. அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெறப் போகும் யுத்தத்தை தடுத்து நிறுத்த முடியாதா? என யாரேனும் இரக்க உள்ளத்தோடு கேட்பார்களாயின்;

அவர்களுக்கான ஒரே பதில் குருஷேத்திரத்தில் கிருஷ்ண பரமாத்மா உபதேசித்த கீதா உபதேசமாகவே இருக்கும்.

ஆம், எது நியதியோ அதுவே நடந்ததாகும். அந்த நியதியை யாராலும் கட்டுப்படுத்தவோ, தடுத்து நிறுத்தவோ முடியாது.

இலங்கையில் யுத்தத்தை தடுக்க முடியும் என்பதே நியதியாக இருந்திருந்தால் அது நோர்வேயினால் முடிந்திருக்க வேண்டும்.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள், மீண்டும் ஜெனீவாவில் நடந்த சந்திப்பு இவை எல்லாவற்றையும் கடந்து யுத்தம் என்பதே முடிபாகி விட்டது.

அதனை உறுதி செய்யும் ஓர் அறிகுறியே விடுதலைப் புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடாது என இலங்கை அரசு நோர்வேக்கு விதித்த தடையாகும்.

# இலங்கை இனப்பிரச்சினைக்கு உதவ இந்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் இரண்டு தசாப்தங்களாக எதிர் நோக்கி வரும் இன்னல்களுக்கு முடிபு காண இந்தியா தலையிட வேண்மென வாழும் கலை நிலையத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ.ஸ்ரீ.ரவிசங்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் நாடு பொள்ளாட்சியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா உதவ வேண்டுமென்று கோரி வருகின்றன.

இந்நிலையில் இலங்கையில் இன முரண்பாட்டைத் தீர்க்க முக்கிய பங்காற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் மக்கள் போதிய உணவு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகள் இன்றி பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தியா இது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.கார்கில் போரில் 2ஆயிரம் இந்தியப் படையினர் உயிரிழந்த பின்னர் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷராப்பிற்கு இந்தியா செங்கம்பள வரவேற்பளித்தது. அப்படியால் இலங்கையின் பிரச்சினையில் ஏன் இந்திய அரசு தலையிடக் கூடாது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

(ச-9)

# எதிர்வரும் நத்தார் பண்டிகை காலத்தில் யாழிற்கு அதிக பொதிகளை அனுப்பலாம்

(கொழும்பு)

எதிர்வரும் நத்தார்ப் பண்டிகைக் காலத்தின் போது கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புற பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் பொதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று பிரதித் தபால்மா அதிபர் டி.பி.காமினி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் மேலும் ஒரு தொகைப் பொதிகள் திருகோணமலை துறைமுகத்துக்கு இன்று அனுப்பப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு பொதிகளை அனுப்பும் மக்களுக்கு ஏற்ற வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊடகங்களினால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு காரணமாக மக்களிடமிருந்து ஒத்துழைப்புக்கள் கிடைத்துள்ளதாக தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நத்தார்ப் பண்டிகை காலத்தில் வெளிநாட்டிலிருந்து வரும் பொதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொழும்பு டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள கருமபீடத்தில் பொதுமக்கள் இவற்றினைப் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டில் உள்ளவர்களிமிருந்து தாம் வசிக்கின்ற பிரதேசத்துக்கு அருகிலுள்ள தபாலகத்தின் மூலம் பொதிகள் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தபால்திணைக்களத் துக்கு கடிதம் மூலம் அறியத்தர வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ச-9)

# நெற்பயிர்ச் செய்கைக்கு தேவையான உரவகைகள் வழங்கப்படவில்லை

## விவசாயிகள் கவலை

(பொன்னாலை)

யாழ்.குடாநாட்டில் செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் நெற் பயிருக்குத் தேவையான உரவகைகளை குறிப்பாக யூரியாவை எடுத்து வருவதில் தொடர்ந்தும் இழுபறி நிலையே நிலவிவருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


யாழ்.குடாநாட்டிக்குத் தேவையான உரவகைகளை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்ட போதிலும்; இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கால்நடைத் தீவனங்கள் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதும் உரவகைகளை எடுத்து வருவதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டுக்குத் தேவையான உரவகைகளை எடுத்து வருவதால் மேலும் தாமதம் ஏற்படுமாயின் நெற்பயிர்ச் செய்கை மட்டுமன்றி மரக்கறிப் பயிர்ச் செய்கைகளும் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என்றும் சுட்டிக்காட்டப் படுகின்றது. அத்தோடு நெல் மற்றும் மரக்கறிப் பயிர்களில் போதிய அறுவடைகளைப் பெறமுடியாது போகலாம் என்றும் மேலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-4)

# பிரச்சினைக்கு தீர்வு காணும் அதிகாரம் அரசாங்கத்திற்கு மட்டுமே உண்டு

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்மானம் எடுக்கும் முழு அதிகாரம் இலங்கை அரசுக்கே உண்டு என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வலியுறுத்தியுள்ளார். ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களோ அல்லது வெளிநாட்டு சக்திகளோ இலங்கையில் இடம் பெறும் எந்தப் பிரச்சினையிலும் தலையிடுவதற்கு எந்த உரிமையும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் முன்னோடி இளைஞர் முகாம் ஒன்றில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதம மந்திரி இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

கடந்த சில காலங்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வன்முறைச் சம்பவங்களை தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை இராணுவத்திற்கெதிராக கருத்துக்களை வெளியிட்ட ஐக்கிய நாடுகளின் சிறுவர் நலன்கள் தொடர்பான விசேட பிரதிநிதி அலன்றொக்கின் கருத்தையும் அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார் (ச-7)

# காசுக்கு வழங்கப்படும் பொருட்களை தேவையாயின் மட்டுமே பெறமுடியும்

## வற்புறுத்தலுக்கு உட்பட வேண்டாம் எனத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் பாவனையாளர்களை காசுக்கான பொருட்களை கட்டாயம் வாங்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுவதாக பல முறைப்பாடுகள் சங்கங்களுக்கும், பிரதேச செயலர்களுக்கும், அரச செயலகத்திற்கும்,கூட்டுறவு திணைக்களத்திற்கும் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணம் எடுப்பவர்கள் மேலதிக காசுக்கும் பெறக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும் காசுக்கான பொருட்களை கட்டாயம் வாங்கினால்தான் நிவாரணம் வழங்கப்படும் என வலியுறுத்தப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இப்படியான செயலில் ஈடுபடும் முகாமையாளர்கள் தண்டிக்கப்படுவர். பொதுமக்களும் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

காசுக்கு மட்டும் வாங்குபவர்கள் தமக்குரிய அளவில் வேண்டியதை மட்டும் பெற்றுக் கொள்ளலாம். பொருட்கள் வழங்கப்படாமல் சிட்டையிடுவதோ பணம் பெறுவதோ பாரிய குற்றமாக கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஞ)

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தமிழீழந்தான் ஒரே தீர்வு

## வை.கோபாலசாமி தெரிவிப்பு

இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தமிழீழம் எனத் தாம் பல வருடங்களாகக் கூறி வருவதாக இந்தியாவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்வின் மூலமே இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் தொலைக் காட்சிக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தியாவைத் தவிர ஏனைய சர்வதேசநாடுகள் பல ஆயுதப் போராட்டங்கள் மூலமாகவே விடுதலையைப் பெற்றுள்ளன.கியூபா ,வியட்நாம் ஆகிய நாடுகள் இவ்வாறே ஆயுதங்கள் மூலம் விடுதலையைப் பெற்றன.

சமாதான விரும்பியாகத் தாம் உள்ள போதும் இலங்கைத் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதிலிருந்து தடுக்கப்படுவதில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வேறு வழியில்லை என்று அவர் கூறினார்.

நாம் முழுமையாக சமாதானம் மூலமாகவே தீர்வை அடைய விரும்புகின்றோம். ஆனால் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் நாம் ஒரு விடயத்தை மறந்து விடக் கூடாது.

இலங்கையில் இடம்பெறும் அப்பாவி மக்களின் கொலைகள் அரச தரப்பினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. அப்பாவிப் பொது மக்களைக் காக்கும் நோக்கிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஏந்தியுள்ளனர் என வை. கோபாலசாமி கூறியுள்ளார்.

இந்தியா வங்காள தேசத்தை உருவாக்கிய போது இந்தியாவின் மேற்கு வங்கத்தில் வாழும் மக்கள் தனி நாடு ஒன்றைக் கோரவில்லை.



இலங்கையில் பிரிவினை தோற்றுமாயின் இது இந்தியத் தமிழ் மக்களை எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை. காரணம் இந்தியாவில் வாழும் தமிழர்கள் ஏனைய மக்களுடன் சமமான அந்தஸ்தில் வாழ்வதாக இந்தியாவின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார். (ச-7)

## புலமைப் பரிசில் பெறுபேறு இவ்வாரம் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் இவ்வாரப் பகுதியில் வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அசர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 12 ஆம் திகதி நடைபெற இருந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சை வடக்குக் கிழக்கில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த மாதம் நான்காம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## தற்காலிக ஏற்பாடு

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கென 28A என ஒரு கிளை உருவாகிறது. இக்கிளையின் செயற்பாடுகள் தற்காலிகமாக ஆரியகுளம் கிளை 15-ல் நடைபெறும். இதன் காரணமாக கிளை 15க்கு உரியவர்கள் கிளை 14ல் (ஆனைப்பந்தி) தங்கள் பொருள்களை,கிளை 28A க்கு என புதிய கிளை திறக்கும் வரை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## யாழில் ஆயுதங்கள் மீட்பு இராணுவம் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் பொழுது ஐந்து இடங்களில இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் நேற்று பகல் வரை இடம் பெற்ற தேடுதலின் போது பொது மக்கள் வழங்கிய தகவலை அடுத்தே இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கரந்தன் பிரதேசத்தில் இருந்து 5 கைக் குண்டுகள், தொலை தொடர்பு சாதனங்கள் மற்றும் 500 ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும்,கைதடி பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதலின் போது வெடிப் பொருள்கள் , டெரெனற்றர் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அதேவேளை பெரியவிளான் பிதேசத்தில் இருந்து ரி-52 ரக துப்பாக்கி ஒன்று, ரவைக்கூடு ஒன்று, 100 துப்பாக்கி ரவைகள் மற்றும் டெரெனற்றர் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. இது தவிர சிறுப்பிட்டி தேடுதலில் 10 கிலோகிராம் நிறையுடைய கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டதாகவும் கல்வியங்காட்டில் 5 கைக்குண்டுகளும் 500 துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-7)

## இந்தியாவுக்கு வந்துள்ள தமிழர்களை பாரமாக நாம் ஒருபோதும் கருதவில்லை

### இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர்

(சென்னை)

இலங்கை தமிழர்களை பாரமாக நாம் கருதவில்லை. அவர்களை வளமாகவே கருதுகிறோம் என அகதி மாணவர்களிடம் இந்தியாவிற்கான இலங்கை துணைத் தூதுவர் ஹம்சா கூறினார்.

இலங்கையில் தொடரும் யுத்த சூழலால் தமிழகத்திற்கு அகதிகளாக வந்தவர்களில் 97 மாண மாணவியரும் உள்ளனர்.

அவர்களின் கல்விக்காக ஈழ ஏதிலியர் மறுவாழ்வு இயக்கம் என்ற தொண்டு நிறுவனம் சென்னையில் உள்ள இந்தியாவிற்கான இலங்கை துணைத்தூதர் ஹம்சாவிடம் கோரிக்கை வைத்தனர்.

அதன் பயனாக அகதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் முதற் கட்டமாக இலங்கையில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை நடைபெறும் அதேதினத்தில் இந்தியாவில் சென்னையிலும் அகதி மாணவர்களுக்கு அதே பரீட்சைகள் நடைபெறுகின்றன. இது வரை எந்த நாட்டிலும் எடுத்திராத முயற்சி இது.நீங்கள் தேர்வில் வெற்றி பெற அதிபர் ராஜபக்ஷ வாழ்த்துக் கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## தொடரும் தற்கொலை தாக்குதலுக்கு பாதுகாப்பு குறைபாடே காரணம்!

### ஆய்வாளர்கள் கருத்து

(கொழும்பு)

இலங்கையின் உயர்பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், பாதுகாப்பு நடைமுறைகளில் உள்ள குறைபாட்டையே காட்டுகின்றது. இது விடுதலைப் புலிகள் இதே போன்று பல தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்துவதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உயர்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த பகுதியினுள் குண்டை பொருத்திய முச்சக்கர வண்டி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் வாகனத்தொடரணி மீது மோதி கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் நடத்தப்பட்ட வீதியில் சாதாரண உடையில் இருக்கும் புலனாய்வுத் துறை அதிகாரிகளும் பாதுகாப்பு படையினரும் கடுமையான சோதனைகளை மேற்கொள்வது வழமையாகும். இச்சம்பவம் பாதுகாப்பு தரப்பினரிடையே பலத்த கேள்விகளை ஏற்படுத்தியுள்ளது. நன்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பகுதியில் பாதுகாப்பு உசார் நிலையில் உள்ள வேளையில் இவ்வாறான தாக்குதல் இடம் பெற்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் இராணுவத் தளபதி மீதும் இரு மாதங்கள் கழித்து இராணுவத்தின் மூன்றாம் நிலை அதிகாரி மீதும் தற்கொலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

அண்மையில் கடற்படை தொடரணி மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலை தாக்குதலில் 116 கடற்படையினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல்களை நடத்துவதற்கு பாதுகாப்பு தரப்பின் உள்ளிருந்து தகவல்கள் வழங்கப்படுகின்றதா என்பது குறித்து அரசாங்கம் கவலையடைந்துள்ளது. விடுதலை புலிகளினால் மேற்கொள்ளப்படும் தற்கொலைத் தாக்குதல்கள் பாதுகாப்பு படைகளுக்கும் பாரிய சவாலாக உருவாகியுள்ளது. தற்போது இவை தொடர்பில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (எ-7)

## அஸாம் தீவிரவாதிகளுடன் விடுதலைப்புலிகளுக்கு தொடர்பு

### திரிபுரா பொலிஸ் தெரிவிப்பு

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அஸாம் தீவிரவாத குழுவிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் தொடர்பு இருப்பதாக திரிபுரா பொலிஸ் தலைமை அதிகாரி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாக கொழும்பு இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அஸாம் தீவிரவாத குழுவினர் ஆயு தங்களை கடத்த உபயோகிக்கும் கம்போடியாவூடான கடல்மார்க்கமான பாதையை விடுதலைபுலிகளும் ஆயுதங்களை கடத்த உபயோகின்றனர். அத்துடன் விடுதலைப்புலிகள் அஸாம் தீவிரவாதிகளிடம் ஒருமாதகால பயிற்சி பெற்றுள்ளதாக திரிபுரா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஸாம் தீவிரவாத இயக்கமான வட இந்தியாவில் தனிநாடு கோரி போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பொருளாதார...

மேற்கொண்டு வருகின்றது என்றார்.

இந்நிலையை உணர்ந்து இந்தியா உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இன்று நடைபெறவுள்ள சந்திப்பின் போது தான் இதனையே வலியுறுத்தவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ச-5)

## நாட்டின் தற்போதைய நிலை...

கொழும்பில் தாக்குதல்கள், இந்தியா உட்பட சர்வதேசத்தின் நிலைப்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் இருவரும் ஆராயவுள்ளனர். விடுதலைப்புலிகளை இலங்கையில் தடைசெய்வது, பயங்கரவாதத்தடைச் சட்டத்தைக் கொண்டு வருவது போன்றவை குறித்தும் இதில் விவாதிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, சுகாதாரத் துறை அமைச்சர் நிமால் சிறிபாடி சில்வா, விவசாயத் துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன போன்ற முக்கிய அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி அணியில் கரு ஜெயசூரிய , ருக்மன் சேனநாயக்க, மைக்கல் பெரேரா ஆகியோர் பங்கேற்கின்றனர். (ச-5)

## சர்வதேசத்தின்...

போன்ற விடயங்களில் இலங்கை அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று தான் அவரிடம் குறிப்பிட் டதாகவும் ஹக்கீம் கூறினார்.

அதேவேளை இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராயப்படும் போது அதில் முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்த கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் தான் பௌயர் அவர்களிடம் வலியுறுத்தியதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டார். (ச)

## மட்டக்களப்பு-அம்பாறையில்...

கஞ்சிக்குடிச்சாறு பிரதேசம் நோக்கி நேற்றுக் காலை 7.30 மணியளவில் காஞ்சிரங்குடா, தாண்டியடி சிறப்பு அதிரடிப்படையினர் பாரிய அளவிலான முன்னேற்ற முயற்சியினை மேற்கொண்டனர்.

ஏறிகணைச் சூட்டாதரவுடன் முன்னேற முற்பட்ட சிறப்பு அதிரடிப்படையினரின் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையினர் தரப்பில் 7பேர் கொல்லப்பட்டுள்ளனர். 13 பேர் படுகாயமடைந்துள்ளனர். 3 விடுதலைப்புலிகள் காயமடைந்துள்ளனர்.

காலை 7.30 மணிமுதல் 10.30 மணி வரை முறியடிப்புத் தாக்குதல் தொடர்ந்தது என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

அதிரடிப்படையினர் பின்வாங்கியதையடுத்து தாண்டியடி, காஞ்சிரங்குடா சிறப்பு அதிரடிப்படை நிலைகளில் இருந்து 11.30 மணிவரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி, பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி சரமாரியான ஏறிகணைத் தாக்குதல்களை மேற் கொண்டனர். இதில் பொது மக்களின் வீடுகள் மூன்று பலத்த சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு வாகரைப் பகுதியை நோக்கி டாங்கிகள்,கவச வாகனங்கள் சகிதமாக படையினர் மேற்கொண்டுள்ள படை நகர்வுக்கு எதிராக விடுதலைப்புலிகள் தீவிர தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக் கப்பட்டது.

வாகரைப் பிரதேசத்தின் மேற்கே உள்ள காட்டுப்பகுதியை அண்டிய கட்டுமுறிவுக்கு ஊடாக வாகரையை ஆக்கிரமிக்கும் நோக்கில் படையினர் முதல் டாங்கிகள்,கவச வாகனங்கள் சகிதமாக நகர்வை மேற்கொண்டனர்.

இந்நகர்வு முயற்சி செறிவான ஏறிகணைச் சூட்டாதரவுடன் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.திருகோணமடு, கரடிக்குளம் படை முகாம்களிலிருந்து படையினர் இந்நகர்வை ஆரம்பித்தனர்.

விடுதலைப் புலிகள், தமது முன்னரங்கப் பகுதிகளில் இவர்களுக்கு எதிரான தீவிர தாக்குதலை தொடுத்தனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். எனினும் இத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் இராணுவத்தினர் எந்தவித தகவலையும் வெளியிடவில்லை. (எ-5,7)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.